பத்திரிக்கைக் குறிப்பு

# இந்திய ரிசர்வ் வங்கி

www.rbi.org.in
**e-mail:** helpprd@rbi.org.in

**பத்திரிக்கைத்தொடர்பு அலுவலகம்,**
மத்திய அலுவலகம், தபால் பெட்டி எண் 406,
மும்பை – 400 001.

## சிறு சில்லறை நாணயங்களை ஏற்றுக்கொள்ளல்

மே 30, 2003

சிறு சில்லறைகளான 5, 10, 20 பைசா நாணயங்களை செல்லத்தக்கவை என்னும் தகுதியை இழந்தவை எனக்கூறி வங்கிகளும், வணிக நிறுவனங்களும் பொதுமக்களும் அவற்றை ஏற்றுக்கொள்வதில்லை என்பது குறித்த அறிக்கைகள் பத்திரிகைகள் சிலவற்றிலும் புகார்கள் மூலமாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் கவனத்துக்கு வந்தது. இந்த நாணயங்களை அச்சடிப்பதும் வழங்குவதும் நிறுத்தப்பட்டாலும் இந்திய அரசாங்கம் அவற்றைப் புழக்கத்திலிருந்து அகற்றிவிடவில்லை. ஏற்தெனவே வழங்கிய அந்த நாணயங்கள் தொடர்ந்து செல்லத்தக்கவை. எனவே அவற்றை எல்லோரும் கொள்வன கொடுப்பனவற்றில் ஏற்றுக் கொள்வது அவசியமாதும். வங்கிகள் அவற்றை ஏற்றுக்கொள்வது கட்டாயமாகும். அவற்றை அருகிலுள்ள இந்திய ரிசர்வ் வங்கி மூலமாக பரிமாற்றம் செய்து கொள்ளலாம்.

பி.வி. சதானந்தன்
மேலாளர்

பத்திரிகை வெளியீடு-2002-2003/1223